Departement Soziales
**Sozialberatung**



# சமூக உதவி சேவையில் உங்களுக்கான உரிமைகளும் கடமைகளும்

## 1. எனக்கு உள்ள உரிமைகள் என்ன?

நீங்கள் கையப்பமிட்ட பொருளாதார உதவி வேண்டுதலை கொடுத்தால், Winterthur மாநகரத்தின் சமூக ஆலோசனை நிலையம் உங்களுக்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறது.

எழுத்துமூலம் ஏற்றுக்கொள்ளப்படாத அல்லது நிராகரிக்கப்பட்ட தீர்வுக்கு எதிராக நீங்கள் 30 நாட்களிற்கிடையில் Hauptabteilung Sozialberatung Winterthur, Pionierstrasse 5, 8403 Winterthur இல் எதிர்முறையீடு செய்யலாம்.

நீங்கள் அளிக்கும் தகவல்கள் மற்றும் விவரங்கள், தகவல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மிகவும் கடும் விளைவுகளுக்கு உட்பட்ட தனி நபர் தகவல் என்று கருதப்படும். சமூக உதவிச்சட்டம் (SHG), அகதிகள் பராமரிப்பு நடைமுறை சட்டம் (AfV)[1] மற்றும் பராமரிப்பு தேவையானோருக்கான மத்திய அரசு சட்டத்தின் படி (ZUG) சமூக ஆலோசனை நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் தாங்கள் ஆற்ற வேண்டிய சட்டப்பூர்வ பணிக்கு தேவையான விவரங்களை மட்டுமே கையாள வேண்டும். உதவி பெறும் நபர் என்ற வகையில் உங்கள் விவரங்களை நீங்கள் ஆராயலாம்.

## 2. என்னுடைய கடமைகள் என்ன?

### 2.1. விவரம் கொடுக்கும், தெரிவிக்கும் கடமைகள்

நீங்கள் சமூக பாதுகாப்பு உதவியை கோரினால், உங்கள் அடையாள விவரங்களை நீங்களாகவே நிரூபிக்க வேண்டும். உங்களை குறித்தோ அதே போன்று உங்கள் துணைவர்/துணைவி குறித்தோ அல்லது பதிவு செய்யப்பட்ட துணைவர்/துணைவி குறித்தோ அல்லது சேர்ந்து வாழ் துணைவர்/துணைவி குறித்தோ மேலும் மைனர் குழந்தைகள் குறித்தோ கோரப்படும் வினாக்கள் மற்றும் அனைவருடைய தனிநபர் மற்றும் நிதி சார்ந்த சம்பந்தம் குறித்து, நீங்கள் முழுமையாகவும் மற்றும் உண்மையாகவும் பதில் அளிக்க வேண்டும்.

§18 SHG மற்றும் §28 சமூக உதவி நடைமுறை சட்டம் (SHV) ஆகிய சட்டங்களின் படி, நீங்கள் உங்கள் வருமான மற்றும் சொத்து ஆகியவற்றில் மற்றும் சொந்த மற்றும் குடும்ப உறவுகள் மேலும் வாழ்க்கை தரத்தில் ஏற்படும் எல்லாவித மாற்றங்கள் குறித்து (உ-ம் இருப்பிட மாற்றம், மேற்கொண்டு நபர்கள் வெளியேருவதும் அல்லது வருவதும், திருமணம் போன்றவை) உடனடியாகவும் மற்றும் எந்த விவரக் கோரலின்றியும் சமூக ஆலோசனை நிலையத்தில் தெரிவிக்க வேண்டும். அதேபோல் தங்கும் மற்றும் இருப்பிட அனுமதியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அதை உடனடியாக தெரிவிக்க வேண்டும். மேலும் எந்த விதமான ஓய்வூதியம் அல்லது எவ்வகையான தினப்படி உதவிகள், காப்பீட்டு நல உதவிகள் அல்லது மூன்றாம் நபர்களினுடான பண உதவிகள் போன்றவை உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும். இந்த தெரிவிக்கும் கடமையானது உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவியின், பதிவு செய்யப்பட்ட துணைவர் அல்லது துணைவியின் அல்லது சேர்ந்து வாழ் துணைவர் அல்லது துணைவியின் மேலும் ஒரே வீட்டில் வசிப்பதாக பதிவு செய்யப்பட இளம் பிள்ளைகள் ஆகியோரின் வருமான மற்றும் சொத்து நிலைகளில் மேலும் சொந்த மற்றும் குடும்ப உறவுகளில் மாற்றம் ஆகியவற்றுக்கும் பொருந்தும். அதே போன்று பொருளாதார உதவி பெறும் காலம் மற்றும் அதற்குப் பின் பெறும் வாரிசு முறை சொத்துக்களைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும் (கடைசி சமூக உதவிக்குப் பிறகு 15 ஆண்டுகள் வரை).[2]
விடுமுறை அல்லது வெளிநாட்டுப் பயணங்கள் பற்றி முன் கூட்டியே சமூக ஆலோசனை நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும், அத்துடன் அவை அனுமதிக்கப் படவும் வேண்டும். அடிப்படையில் விடுமுறை அல்லது வெளிநாட்டுப் பயணங்களுக்கு உங்களுக்கு உரிமையில்லை. அனுமதிக்கப்படாத வகையில் இல்லாதிருத்தல் அல்லது ஆமோதிக்கப்பட்ட காலத்தை விட அதிக காலம் இல்லாதிருத்தல் போன்றவை ஆதரவு சேவையை குறைக்கவோ அல்லது திரும்பப் பெறவோ அல்லது உதவியை நிறுத்தி வைக்கவோ வழி வகுக்கும்.

### 2.2. உதவிக்கான தேவையை குறைத்தல்

பொருளாதார உதவி கோருபவர் அதற்கு தகுதியாவதற்கு அவர் தன் சொந்த பணத்தில் வாழ்க்கையை நடத்த முழுமையாக வசதி இல்லாதவராகவோ தேவைகளை உரிய நேரத்தில் சந்திக்க முடியாதவராகவோ இருக்க வேண்டும் (§ 14 SHG). இந்த மாற்று பங்களிப்பு கொள்கையின்படி, ஒருவர் தன் வாழ்வாதாரத்தை தானாகவோ அல்லது மற்றவர்களின் உதவியின் மூலமோ ஏதேனும் பிரச்னைகளை சந்திக்க முடியாத வகையில் மட்டுமே, இந்த பொருளாதார உதவி நியாயப்படுத்தப்படுகிறது.

எனவே நீங்கள் உங்கள் சொந்த மற்றும் நிதிநிலையை மேம்படுத்துவதற்கு சாத்தியமான எல்லா வழிகளையும் முயற்சிக்க வேண்டும். இதில் நீங்கள் சொந்தமாக உழைப்பதும் அடங்கும். ஆதரவு பெறும் நபர், வேகமாக தொழில் மற்றும் சமூகத்தோடு ஒன்றிணைய வேண்டி செயல்திறன் கொண்டு செயல்படுவார் என எதிர்பார்க்கப்படும் (இதற்கான செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் பங்கு கொள்வதும் இதில் அடங்கும்). மேலும், உங்களுக்கு உரிமையான நிதிகளை கவனத்துடன் கோர கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் இப்படிப்பட்ட உரிமைகள் பொருளாதார உதவியை காட்டிலும் முன்னுரிமை கொண்டவையாகும் (உ-ம். தினப்படி உதவித் தொகை மற்றும் பென்ஷன் உரிமைகள், குடும்பத்திற்கான உதவித் தொகை மற்றும் ஜீவனாம்ச முன் பணம், மற்றும் பயிற்சி ஒப்பந்தத்தில் உள்ள உரிமைகள்). இவ்வாறு கிடைக்கப் பெறும் உதவிகள் முடிந்தவரைக்கும் சமூக ஆலோசனை நிலையத்திற்கு ஒதுக்கப்படும்.

### 2.3 நிபந்தனைகளை மற்றும் உதவி குறைப்பைப் பின்பற்றுதல்

§ 21 SHG, § 23 SHV மற்றும் §17 பந்தி 4 AfV ஆகியவற்றின்படி, சமூக ஆலோசனை நிலையம் சில எழுத்து ரீதியான நிபந்தனைகளை உங்கள் மீது விதிக்கலாம், உதாரணமாக, நியாயமான சம்பாத்திய வேலையை உள்ளடக்குதல் அல்லது ஒருங்கிணைப்பு முறையில்பங்கு கொள்ளுதல். சாத்தியமுள்ள உதவி குறைப்பு அல்லது உதவி நிறுத்தம் ஆகியவைகளை குறிப்பிட்டும், நீங்கள் அந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யாவிடில், இந்த சேவைகள்

[1] AfV என்ற அகதிகள் பராமரிப்பு நடைமுறை சட்டத்தின் படி அடையாள அட்டை N உள்ள அகதி விண்ணப்பதாரிகள், அடையாள அட்டை S உள்ள பாதுகாப்பு தேவைப்படுபவர்கள், அடையாள அட்டை F உள்ள தற்காலிக வதிவிட அனுமதி பெற்ற வெளிநாட்டினர் உதவி பெறுவார்கள். யுகஏ சட்டத்தின் படி உதவி பெரும் நபர்களுக்கு சமூக உதவி சட்டம் (SHG) மற்றும் சமூக உதவி நடைமுறை சட்டம் (SHV) இரண்டாம் பட்சமாக பாவிக்கப்படும்.

வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய அடிப்படை தேவைகளிலிருந்து 30% குறைக்கவோ அல்லது தொடராமல் நிறுத்தவோ கூடும். அதே போன்று ஒருங்கிணைப்பு உதவித்தொகை அல்லது வரியில்லாத வருமானம் குறைக்கப்படலாம் அல்லது மேலும் கொடுக்கப்படாமல் நிறுத்தப்படலாம். (§24 மற்றும் § 24a SHG மற்றும் §17 பந்தி 1 AfV).

### 2.4. உறவுகளின் ஆதரவு அளிக்க வேண்டிய கடமை

உங்கள் உறவினர்கள் இளையவரிலிருந்து முதியவர் மேலும் முதியவரிலிருந்து இளையவர் என்ற வரிசைப்படி (குழந்தைகள், பெற்றோர்கள், பேரப்பிள்ளைகள், தாத்தா பாட்டிகள்) உங்களுக்கு உதவி செய்வதற்கு கடமைப்பட்டவர்கள் ஆவர் (பகுதி 328 மற்றும் 329 ZGB) நிதி சம்பந்தப்பட்ட நலன்களை பெற்றால், அவர்களுடைய நிதி சார்ந்த சாத்தியங்களை
கருத்தில் கொண்டு, இந்த உறவினர்களின் பங்களிப்பு கடமைக்கான சாத்தியங்களை சமூக ஆலோசனை நிலையம் ஆராயும்.

### 2.5. சட்டப்பூர்வமான பலன்களை பெறுவதால் தோன்றும் திரும்பச் செலுத்தும் கடமைகள்

§27 SHG மற்றும் §18 பந்தி 2 AfV படி, கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் நீங்கள் உங்களுக்கும் உங்களின் பதிவு செய்யப்பட்ட துணைகளுக்கும் மேலும் இளம் பிள்ளைகளுக்கும் என சட்டப்பூர்வமாக பெற்ற சமூக ஆதரவுக்கான நிதிகளை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளீர்கள்:

– உங்களுக்கோ அல்லது மேற்கூறப்பட்ட நபர்களுக்கோ பொது அல்லது தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் உதவி வழங்கப்பட்டிருந்தால் (உ-ம்: வேலையில்லா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தினப்படி உதவித் தொகை, விபத்துக் காப்பீடு, ஓய்வூதியம் (BVG) அல்லது கூடுதல் சேவைகளுக்கான மையங்கள் முதலியன அல்லது மற்ற வெளி நபர் மூலம் உதவி பெற்றிருந்தால் (§ 27 பகுதி 1 lit. a SHG, §18 பகுதி 2 lit. a AfV). ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நீங்கள் பெற்ற உதவிகளுக்கான நிதியில், நீங்கள் எந்த அளவு பின்னர் காப்பீட்டு பலன்களைப் பெற்றீர்களோ அந்த அளவு தொகையை நீங்கள் செலுத்த வேண்டும்.

– நீங்களோ அல்லது மேற்குறிப்பிட்ட நபர்களில் எவரேனும் வாரிசுரிமை மூலமாகவோ, லாட்டரிச் சீட்டுப் பரிசு மூலமாகவோ அல்லது சொந்த உழைப்பில் அல்லாது மற்ற காரணங்களுக்காகவோ தங்களுக்கு சாதகமான முறையில் பலன்களை பெற்றால் (§ 27 பகுதி 1 lit. b SHG, §18 பகுதி 2 lit. b AfV),

– நீங்களோ அல்லது மேற்குறிப்பிட்ட நபர்களில் எவரேனும் சொந்த உழைப்பின் மூலம் தங்களுக்கு சாதகமான முறையில் நிதி சார்ந்த பலன்களை பெற்றால், அதாவது திருப்பி செலுத்துவது சரியானது (§ 27 பகுதி 1 lit. b SHG),

– ஏற்கனவே இருக்கின்ற ஆனால் தற்போது எளிதில் பணமாக்க முடியாத (நிலையான) சொத்துக்கள் (உ-ம்: அசையா சொத்துக்கள், வீட்டு மனை அல்லது அடுக்கு மாடி வீடு, வாரிசு சொத்துகளில் அல்லது மற்ற சொத்துகளில் பங்குகள்) பின்னர் பணமாகக் கிடைக்கும்பட்சத்தில். (§20 இணைந்து §27 பகுதி 1 lit. c SHG).

ஆதரவு அளிக்கப்பட்ட நபர் இறந்து போனால், ஏற்கனவே கொடுக்கப்பட்ட நலத் திட்ட செலவுகளை திரும்ப செலுத்துவது என்ற ஷரத்து உயிலுக்கு எதிராக செயல்படுத்தப்படும் (§28 SHG).

15 வருடங்களுக்கு மேல் கொடுக்கப்பட்டு வந்த சமூக பலன்கள் திரும்ப கோரப்படமாட்டாது. ஆனால் எந்த சேவைகளின் பேரில் திரும்பக் கட்டுதல் என்ற கடமை கையொப்பமிடப்பட்டுள்ளதோ அல்லது – சொத்துக்கள் வைத்திருப்பின் - அடமான ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அந்த சேவைகளுக்கு மேற்கூறியது அதாவது கோரலில் இருந்து விலக்குப் பொருந்தாது (§30 SHG).

### 2.6. சட்டத்திற்குப் புறம்பான முறையில் பலன் பெறுதல் மற்றும் தண்டனை ஷரத்துக்களின் பேரில் திருப்பி செலுத்தும் கடமை

பொய்யான அல்லது முழுமையல்லாத விவரங்களை தெரிவித்து அதன் அடிப்படையில் சமூக உதவிகளை பெற்றிருந்தால், §26 lit.a SHG, §18 பகுதி 1 AfV படி அந்த உதவிகள் திருப்பி செலுத்தப்படவேண்டும். அதே போன்று, சமூக ஆலோசனை நிலையத்திற்கு நிர்ணயித்த காரணங்களுக்கு அன்றி மற்ற காரணங்களுக்காக இந்த உதவிகளை உபயோகித்தாலும் இதனால் சமூக ஆலோசனை நிலையம் மீண்டும் உதவி செய்ய வேண்டி வரும் என்பதால் மேற்கூறிய ஷரத்து இதற்கும் பொருந்தும். (§26 lit. b SHG, §17 பகுதி 2 lit. c AfV). § 24 பகுதி 1 lit. a Ziff. 5 SHG மற்றும் §17 பகுதி 1 lit. a AfV படி இவ்வாறு துஸ்பிரயோகம் செய்வது உதவிகள் குறைப்பதற்கு வழி வகுக்கப்படும். இல்லாத உரிமை ஒன்றின் பேரில் ஆதரவு உதவிகளை பெற்றிருந்தால், அவ்வாறு பெற்ற நியாயமற்ற லாபத்தை திருப்பி செலுத்த வேண்டிய கடமையும் இதில் பொருந்தும். (§62 மற்றும் பின்வரும் பகுதிகள் OR) இவ்வாறு அதிகமாக பெற்ற சமூக ஆதரவு உதவிகள் பற்றி சமூக ஆலோசனை நிலையத்திற்கு உடனடியாக தெரிவித்து அதற்கான தொகையை உடனடியாக திருப்பி செலுத்த வேண்டும்.

குறிப்பு: உங்களுக்கு மற்ற நபர்களுக்கு எதிராக உள்ள பலன்கள் மற்றும் சாத்திய உரிமைகள் உள்ளதை சமூக ஆலோசனை நிலையம் ஆராய கடமைப்பட்டுள்ளது. இதன் காரணமாக, சூரிச் சமூக காப்பீட்டு நிறுவனத்தில் நீங்கள் ஆதரவு பெற தொடங்கிய உடனே அல்லது ஆதரவு பெறும் காலத்தில், உங்கள் சொந்த AHV கணக்கின் நகல் பெறப்படும். மேலும் பொதுவாக இது குறித்து மாநில போக்குவரத்து அலுவலகத்தில் விசாரிக்கப்படும்.

சட்டத்திற்குப் புறம்பான வகையில் பலன்களை பெற்றதாக சந்தேகம் ஏற்பட்டால், §18 பகுதி 4, §47 lit. c மேலும் §48 பகுதி 2 SHG மற்றும் §27 SHV ஆகியவற்றின் அடிப்படையில் உதவி பெற்றவர்கள் கொடுத்த தகவல்கள், உதாரணமாக குறிப்பிட்ட அலுவலகங்களில், வேலை வழங்குவரிடம் அல்லது வீட்டு வாடகையாளரிடம் தகவல்களை உறுதி செய்வதுடன் மூன்றாம் நபரினூடாக தகவல்களும் பெறுவதற்கு சமூக ஆலோசனை நிலையம உரிமை பெற்றுள்ளது.

§148 lit. a சுவீஸ் குற்றவியல் சட்டத்தின் படி (StGB) எவரேனும் மாற்றங்களை மறைத்து, தவறான அல்லது முழுமையற்ற தகவல்களை அல்லது வேறு வழியில் ஏமாற்றி தனக்கு அல்லது மற்றவர்களுக்கு முறையற்ற பலன்களை பெற்றிருந்தால், அவ்வாறு செய்தவர் மீது குற்றப் புகார் பதிவு செய்ய Winterthur நகரத்தின் சமூக சேவைத் துறை கடமைப்பட்டுள்ளது. நீங்கள் தீங்கிழைக்கும் முறையில் கையாண்டால், நீங்கள் §146 StGB ஏமாற்றுதல் என்ற அடிப்படையில் குற்றப்புகார் அளிக்கப்படும். சட்டப் பிரிவுகள் §148 lit. a அல்லது §146 StGB படி ஒரு தீர்ப்பானது வெளிநாட்டவரை சுவிஸ் நாட்டைவிட்டு வெளியேற்றும் நிலைமையை ஏற்படுத்தலாம்.

## 3. புலம்பெயர்தல் அலுவலகத்தில் தகவல் கொடுக்கும் கடமை

வெளிநாட்டினர்கள் மற்றும் வெளிநாட்டு பிரஜைகளுக்கு அளிக்கப்பட்ட நிதி சார்ந்த நல உதவிகளை பற்றி Winterthur நகரத்தின் சமூக ஆலோசனை நிலையம், சூரிச் மாநில புலம்பெயர் அலுவலத்திற்குத் தகவல் கொடுக்க கடமைப்பட்டுள்ளது. நிரந்திர வசிப்பிட அனுமதி பத்திரம் வைத்திருப்பவர்கள், 15 ஆண்டுகளுக்கு மேலாக சுவிசில் வசிப்பவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் பற்றி தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. பொருளாதார சமூக உதவி பெறுபவர்களின் வசிப்பிட உரிமை, அல்லது நிரந்திர வசிப்பிட அனுமதி மாநில புலம்பெயர்தல் அலுவலகத்தினால் பறிக்கப்படலாம்.